# 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலும் இராஜாஜி அமைத்த கூட்டணி ஆட்சியும்!

தமிழகச் சட்டமன்றத்திற்கு 2026 ஏப்ரல் 23 ஆம் தேதி தேர்தல் நடந்தது. மே 4 ஆம் தேதி முடிவுகள் வெளியாயின. எந்தவொரு கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. சட்டமன்றத்தில் அதிக இடங்களைப் பெற்ற முதன்மை கட்சியாகத் தமிழக வெற்றிக் கழகம் திகழ்ந்தது.

**இதற்குத் தி.மு.க. அணியிலிருந்த கட்சிகள் பா.ஜ.க.வின் அதிகார ஊடுருவலைத் தடுக்கவும் உடனடியாகத் தேர்தலைச் சந்திக்க வேண்டாம் என்பதற்காகவும் த.வெ.கவை ஆதரித்து ஆட்சியில் அமரச் செய்தன. த.வெ.க.வினர் தப்பாட்டம் ஆடி மேலும் அதிக இடங்களைப் பெரும்பான்மையாகப் பெருக்கிக் காட்டினர்.**

**இதனால் சிலர் 1952ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டணி ஆட்சியைப் போன்றது இக் கூட்டணி, சென்னை மாநிலத்தில் (தமிழ்நாட்டில்) முதலில் அமைந்த அந்தக் கூட்டணி ஆட்சிக்குப் பிறகு தமிழ்நாட்டில் அது போன்ற கூட்டணிஇப்போது அமைந்துள்ள த.வெ.க. கூட்டணி என்று பேசி வருகின்றனர். ஆகவே அந்தக் கூட்டணி எப்படி அமைந்தது? அன்றைய கட்சிகளின் வெற்றியின் நிலவரம் என்ன? சூழ்நிலை என்ன என்பதைக் கழகத் தோழர்கள் அறிந்து கொள்வதற்காக எழுதப்படும் கட்டுரை இது.**

தமிழ்நாடு சென்னை மாநிலத்தின் பகுதியாக இருந்தது. ஆந்திராவும் மலபார் பகுதியும் தமிழ்நாடும் சேர்ந்ததுதான் சென்னை மாநிலமாக அப்போது இருந்தது.

அன்றைய சட்டமன்றத்திற்கு 375 இடங்கள் நிர்ணயிக்கப்பட்டு இருந்தன. முதல் தேர்தல் 1952 ஜன.27 ஆம் தேதி முதல் தொடங்கி மார்ச்சில் தேர்தல் நடந்து முடிந்தது. தேர்தல் இந்தியா முழுவதும் 4, 5 கட்டங்களாக நடந்தது.

தி.மு.கழகம் தனது தனிநாட்டுக் கொள்கையை ஆதரிப்பவர்களுக்கு பரப்புரை செய்தது. வாக்காளர்களை அவர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டது. தி.மு.கழகம் அப்போது தேர்தலில் போட்டியிடவில்லை. கழகம் காங்கிரசை மிகக் கடுமையாக எதிர்த்தது. கம்யூனிஸ்டுகளும் எதிர்த்தனர். பெரியார் காங்கிரசை எதிர்த்தார். சோசலிஸ்டுக் கட்சியினரும் காங்கிரசை எதிர்த்தனர்.

தேர்தல் முறை இப்போதுபோல் வளர்ச்சி அடைந்ததாக இருக்கவில்லை. 1952, 1957 பொதுத்தேர்தல்களில் வாக்காளர்களுக்கு வாக்கு அளிப்பது என்பதும் வாக்குப் பெட்டியும் வித்தியாசமான காட்சிகளாக இருந்தன. ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனிப் பெட்டி கொடுக்கப்பட்டிருக்கும்.

அந்தப் பெட்டிகளில் வேட்பாளர்களின் சின்னங்கள் ஒட்டப்பட்டு இருந்தன. வாக்காளர் தாம் விரும்பும் வேட்பாளர் பெயர் மற்றும் சின்னத்தை அறிந்து அதற்குரிய பெட்டியில் வாக்கைப் போடுவார்.

வாக்குச் சீட்டின் அளவு சிறியதாக இருந்தது. வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள இடம் திரையினாலோ தட்டியினாலோ மறைக்கப்பட்டு இருக்கும்.

வாக்காளர்கள் தாம் தேர்ந்தெடுக்க விரும்பும் வேடபாளர் சின்னம் உள்ள பெட்டியில் வாக்கைப் போடாமல் இருக்கவும் வாய்ப்பு உண்டு. இதைச் சாதகமாக்கிக் கொண்டு வாக்குகள் வாங்கப்பட்டன. எப்படி, என்றால் வாக்காளர் தனக்குக் கொடுத்த வாக்குச் சீட்டைப் பெட்டியில் போடாமல் மறைத்து எடுத்துக் கொண்டு வெளியில் போகும் வாய்ப்பு அப்போது இருந்தது. பின்னர் இக்குறைகள் நீக்கப்பட்டன.

கழகப் பரப்புரையும் அப்போதைய கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கும் காங்கிரசைத் திக்குமுக்காட வைத்தன. பொதுவாக மக்களிடையே காங்கிரஸ் எதிர்ப்பு அலை 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தேர்தலிலேயே வீசியது. காங்கிரஸ் சுதந்திரம் பெற்று தந்த கட்சி என்ற உணர்ச்சியும் மக்களிடம் இல்லை. விளைவு என்னவாயிற்று?

தேர்தலில், முதலமைச்சராக இருந்த குமாரசாமி ராஜாவும் இன்னும் நான்கு சக அமைச்சர்களும் தோற்றனர். பூண்டி வாண்டையார், குன்னியூர் சாம்பசிவ அய்யர், இராமநாதபுரம் ராஜா போன்றோர் சட்டமன்றத் தேர்தலில் தோற்றனர். நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ - ‘தினமணி’ அதிபர் இராம்நாத் கோயங்கா போன்றோர் தோற்றோடினர்.

காமராசர் விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து ஜி.டி.நாயுடு போட்டியிட்டார். தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கின. ஒரு கட்டத் தேர்தல் முடிந்ததுமே. மறுகட்ட தேர்தல் நடைபெறுவதற்கு முன்பே முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதனால்வேட்பாளர்களின்வெற்றிதோல்விகள் எதிர்பாராமல் நிகழ்ந்தன.

ஆக,தேர்தல் முடிவுகள் ஒரு வழியாக வெளிவந்தன. அந்த முடிவுகள் கீழ்க்காணும் விதத்தில் அமைந்து இருந்தன.

| மொத்த இடங்கள் 375 | |
|---|---|
| காங்கிரஸ் -152 | 358 |
| சுயேச்சைகள் -63 | காமன்வீல் -6 |
| கம்யூனிஸ்டுக் கட்சி - 61 | முஸ்லிம் லீக் - 5 |
| பிரஜாசோசலிஸ்ட - 35 | பார்வர்டு பிளாக் - 3 |
| உழைப்பாளர் கட்சி -19 | தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் - 2 |
| என்.ஜி.ரங்கா கட்சி -15 | ஜஸ்டிஸ் கட்சி -1 |
| சோசலிஸ்டு - 13 | |
| 358 | 375 |

இதன்படி எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்கும் அளவுக்குப் பெரும்பான்மையைப் பெறவில்லை. காங்கிரஸ் 152 இடங்களை மட்டுமே பெற்று இருந்தது. இதைக் கொண்டு காங்கிரஸ் ஆட்சியை அமைக்க முடியாது. ஆட்சி அமைக்க 188 இடங்கள் தேவையாக இருந்தன.

அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த காமராசர் மிக தைரியமாக காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் என்று அறிக்கை வெளியிட்டார். இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் அப்படி ஒரு நிலைமை ஏற்படவில்லை. ஆனால் தென்னகத்தில் இப்படியொரு சூழ்நிலை உருவாயிற்று.

இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகவும், மேற்கு வங்க கவர்னராகவும், ஒன்றிய அரசின் இலாகா இல்லாத அமைச்சராகவும், உள்துறை அமைச்சராகவும் இருந்த இராஜாஜி 1952இல் எந்தப் பதவியும் இல்லாத ‘அரசியல் சந்நியாசி’ ஆகியிருந்தார். பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு சென்னை மாநிலத்தில் அமைச்சரவை அமைக்கும்படி அவரிடம் கோரினார். இது அவரின் அப்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப தெரிவித்த தனிப்பட்ட விருப்பமாகும்.

ஒரு தர்மசங்கடமான சூழ்நிலையைக் குழப்பமான வெற்றி இடங்களைப் பெற்றுள்ள கட்சிகளை இராஜாஜி எப்படிச் சரி செய்தார்? கவர்னர் எப்படி நடந்து கொண்டார்? காங்கிரஸ் கட்சி எப்படி நடந்து கொண்டது? கவர்னர் தப்பாட்டம் ஆட எப்படி ஒத்துழைத்தார்? என்பனவற்றை இனி, பார்ப்போம். இதன்படி கவர்னரின் ஆட்டங்கள் தொடங்கிய முதன் மாநிலம்சென்னை மாநிலம்தான் அதாவது தமிழ்நாடுதான்!

இப்போது ஒருமுறை வெற்றி பெற்ற கட்சிகளின் பட்டியலை பார்த்துக் கொள்ளுங்கள். இப்போது நாம் அதைப் பற்றி விளக்குவதைப் படித்துப் பாருங்கள்.

காமராசர் காங்கிரஸ் ஆட்சியை அமைக்கும் என்று அறிவித்தவுடன், கம்யூனிஸ்டுகள் நாங்கள் ஆளுவோம் என்றார்கள். அவர்கள் காங்கிரஸ் அல்லாத ஆட்சி அமைப்பது சாத்தியம் என்று கூறினார்கள். காங்கிரஸ் அணியில் அல்லாதவர்களுள் நிலப்பிரபுக்களும் வெற்றி பெற்று இருந்தார்கள். அவர்களும் கம்யூனிஸ்டு அணியில் சேருவார்கள் என்று கூறப்பட்டது.



**க.திருநாவுக்கரசு**
**திராவிட இயக்க ஆய்வாளர்**

பிரகாசம்காரு தோற்றுப்போனாலும் அவரின் ஆதரவாளர்கள் 35 பேர் வெற்றி பெற்று இருந்தார்கள். அவர் 61 கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொண்டு ஒரு முன்னணியை அமைத்து ஆட்சியை உருவாக்கலாம் என்று கருதினார். ஆனால் அவரின் ஆதரவாளர்களான 35 பேர் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக இருந்தார்கள், அவர்கள் பிரகாசம்காருவின் கருத்துக்கு உடன்பாடாக இல்லை.

ஆனாலும் அவரின் அய்க்கிய ஜனநாயக முன்னணியின் சார்பாக 166 இடங்களுக்கான கட்சிகளைக் கொண்டு ஆட்சி அமைக்க உரிமைக் கோரினார். இந்த எண்ணிக்கை சட்டமன்றத்தில் பலம் காட்டுவதற்குரியதாக இல்லை. அடுத்து வெற்றி பெற்ற கட்சிகளுள் பெரும்பான்மை (152 எண்ணிக்கை) கொண்ட ஒரே கட்சியாக காங்கிரசு இருந்தது. இப்போது கவர்னர் யாரை அழைப்பார்? 166 எண்ணிக்கையைக் கொண்ட அணியையா? 152 எண்ணிக்கை கொண்ட ஒரே கட்சியான காங்கிரசையா?

166 பேர் கொண்ட அணியை கவர்னர் அழைத்து ஆட்சியை அமைக்கச் சொல்லி சட்டமன்றத்தில நிரூபிக்கச் சொல்லி இருக்க வேண்டும். அப்போது கவர்னராக இருந்தவர் பவநகர் ராஜா என்று அழைக்கப்பட்ட மகாராஜா கிருஷ்ணகுமார் சிங்ஜி ஆவார். இவர் பதவிகாலம் முடிந்து இருந்தது. ஆனால் பதவியில் இருக்கிறார். அவருக்கு புதியவர் வரும் வரை அவர்தான் கவர்னர். ஆனால் அவர் கட்சிகளை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை. அந்த வாய்ப்பை மேலிடம் அவருக்கு வழங்கவில்லை. புதிய கவர்னர் விஷயமாக எந்தச் செய்தியும் குடியரசுத் தலைவரின் அலுவலகத்திலிருந்தும் வெளியிடப்படவில்லை. இப்படி ஒரு வெற்றிடம் இந்நிகழ்வில் தெரியவருகிறது.

பிரதமர் நேரு இராஜாஜியை ஆட்சி அமைக்குமாறு கோரியிருந்தார் என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டு இருந்தோம். இராஜாஜி முதல்வராவதை தேர்ந்தெடுக்கப்பட்டோரில் சிலர் விரும்பினர். அவர் முதல்வராக வேண்டும் என்பதற்காக உடனடியாக பவநகர்ராஜாவின் இடத்திற்கு ஸ்ரீபிரகாசா கவர்னராக நியமனம் ஆனார். அவர் 166 பேர் கொண்ட அய்க்கிய ஜனநாயக முன்னணியை அழைக்கத் தயாராக இல்லை. ஸ்ரீபிரகாசா, இராஜாஜி மட்டுமே குழப்பநிலையை சமாளித்து ஆட்சி அமைக்கக் கூடியவர் என்று கருதினார். அதற்குரிய நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார்.

இராஜாஜி சட்டமன்ற உறுப்பினர் இல்லை. அவர் (இடைத்)தேர்தலில் நிற்கக் கூடியவர் இல்லை. இராஜாஜி முதல்வராவதற்கு காமராசரின் ஒப்புதல் கிடைத்தது. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எவ்வளவு சுதந்திரமும் அதிகாரமுடையதாக இருக்கிறது பாருங்கள். இராஜாஜி விஷயமாயிற்றே காமராசரின் கருத்தும் செயலும் மிக முக்கியமானது. டெல்லி மேலிடம் முதல் தமிழ்நாடு வரை காமராசர் அதிகார பொறுப்பில் இல்லாமலேயே ஆற்றல் மிகுந்த தலைவராக அவர் விளங்கி வந்ததே இதற்குக் காரணம்! மேலும் பிரதமர் நேரு காமராசரின் ஆதரவு இல்லாமல் இராஜாஜி முதல்வர் ஆவதை விரும்பவில்லை. அப்படியானால் காமராசரின் பலம் காங்கிரசில் எப்படி இருந்தது என்பதை நாம் உணரலாம். இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. தேர்தலுக்குப் பிறகு நேருவை காமராசர் சந்திக்கவில்லை.

இராஜாஜி முதல்வராக வர வேண்டும் என்பதற்காகக் குமாரசாமி ராஜா தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தார். உள்ளூர் காங்கிரஸ் கமிட்டிகள் வேறு தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தன. நேருவும் இராஜாஜி அமைப்பு ரீதியாக முன்மொழியப்பட்டு முதல்வராக வரவேண்டும் என்று விருப்பம் கொண்டிருந்தார்.

இராஜாஜிக்கு முதல்வர் ஆவதில் விருப்பம் இல்லை என்றே ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஆராய்ந்து பார்த்தால் அது உண்மை என்றே தெரிகிறது. வெற்றி பெற்றவர்களை ஒருங்கிணைத்து அமைச்சரவை அமைக்க இராஜாஜி ஏற்றவர் என்ற முடிவே அவரின் முன்மொழிவுக்குக் காரணமாக அமைந்தது. இது குறித்து நேரு தலைமைச் செயலாளருக்கு ஒரு குறிப்பை அனுப்பி வைக்கிறார்.

இராஜாஜி அந்தக் குறிப்பின் மீது தலைமைச் செயலாளர் இராமுன்னி மேனனுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதுமட்டுமில்லை, குடியரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத்துக்கு இராஜாஜி முதல்வர் தேர்வைப் பற்றி கவர்னர் ஸ்ரீபிரகாசா ஒரு கடிதம் எழுதினார். இப்படி இராஜாஜி முதல்வராவதற்குள் குடியரசுத் தலைவர், பிரதமர், கவர்னர், காங்கிரஸ் தலைவர்கள், அமைப்புகள் என்று ஏராளமான குறிப்புகளும் கடிதங்களும் உரையாடல்களும் நடந்து இருக்கின்றன. அவற்றையெல்லாம் எழுதினால் இது ஒரு நூலாக உருவெடுத்துவிடும்.

**இதற்குள் தேர்தல் நடந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. 1952 மார்ச் 31 ஆம் தேதி கவர்னர் சிறப்பு நியமன அடிப்படையில் சட்டமன்ற மேலவை உறுப்பினராக இராஜாஜி நியமிக்கப்பட்டார். இன்னும் சிலரும் நியமிக்கப்பட்டனர். கவர்னர் அறிவியல், இலக்கியம், சமூக சேவை போன்ற வற்றில் ஈடுபாடுள்ளவர்களை நியமிக்கலாம் என்று சட்டம் சொல்கிறபடி இராஜாஜி நியமனமானார்.**

**இன்னொரு மிக முக்கியமான விஷயமும் நடந்தது. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் தலைவராக இராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என காங்கிரஸ் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அந்தத் தீர்மானத்தைக் காமராசர் முன்மொழிந்தார். அதை ஆந்திர பிரதேச காங்கிரஸ் சார்பாக சஞ்சீவ ரெட்டி வழி மொழிந்தார். இராஜாஜி ஏகமனதாக காங்கிரஸ் ஆட்சிமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறு நாளே கவர்னர் ஸ்ரீபிரகாசா, இராஜாஜியை அமைச்சரவை அமைக்கும் படி கேட்டுக் கொண்டார். மார்ச் மாதமும் கடந்து ஏப்ரல் மாதமும் வந்துவிட்டது.

இங்கே இன்னொரு செய்தியையும் சொல்ல வேண்டும் என்று விரும்புகின்றோம். 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எம்.பக்தவத்சலமும் தோற்றுப்போயிருந்தார். அவர் இராஜாஜி முதல்வர் ஆவது குறித்து சொல்கிறபோது, 1952 ஆம் ஆண்டு இராஜாஜி முதலமைச்சர் ஆனார். மேல் சபையில் என்னை உறுப்பினராகப் போட வேண்டும் என்று அவர் விரும்பினார். காமராஜ் அதை விரும்பவில்லை. ஆனாலும் உறுப்பினர் தேர்தலில் நான் வெற்றி பெற்றேன். பிறகு இராஜாஜி சுப்பிரமணியத்தின் மூலம் நான் அவரது மந்திரிசபையில் சேர வேண்டும் என்று சொல்லியனுப்பினார்.

“காமராஜ் சார்பில் கோசல்ராம் முதலியவர்கள் என்னிடம் வந்து மந்திரி பதவியை ஒப்புக் கொள்ள வேண்டாம் என்று தடுத்தார்கள். இராஜாஜி காங்கிரஸ் சார்பில் முதலமைச்சராக இருந்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் ஆதரவும் அதற்கு இருந்தது. அவருடன் ஒத்துழைக்க மறுக்கப்பட்டது என்றால் காங்கிரசுக்கு ஒத்துழைப்புத்தர மறுப்பது என்று அர்த்தம் , அதை நான் விரும்பவில்லை.

இரண்டாவதாக, பாகிஸ்தான் சர்ச்சையில் நான் இராஜாஜியை எதிர்த்து இருக்கிறேன். அப்படியிருந்தும் என்னை மந்திரி பதவி ஏற்க அழைத்து இருந்தார். காங்கிரஸ் முதலமைச்சரான அவருக்கு ஒத்துழைப்புத்தர மறுக்க இயலாது என்பது தர்க்க ரீதியான நிலை; அந்த அடிப்படையில்தான் அவரது மந்திரி சபையில் சேர ஒப்புக் கொண்டேன்” என்று ‘எனது நினைவுகள்’ நூலில் முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் எழுதியிருக்கிறார்.

1952 ஆம் ஆண்டு ஜன.27இல் தொடங்கி நடத்தப்பட்ட தேர்தல் முடிவுகள் வந்து இராஜாஜி அமைச்சரவைப் பதவியேற்பதற்கு 72 நாள்கள் ஆகிவிட்டன. இறுதியாக ஏப்ரல் 10 ஆம் தேதி இராஜாஜி அமைச்சரவைப் பதவி ஏற்றுக் கொண்டது. அமைச்சர்களின் விவரம் வருமாறு:

**(1) இராஜாஜி - முதலமைச்சர்**

**(2) ஏ.பி.ஷெட்டி - சுகாதாரம் (மக்கள் நல்வாழ்வு)**

**(3) சி.சுப்பிரமணியம் - நிதி**

**(4) கே.வேங்கடசாமி நாயுடு - அறநிலையத்துறை**

**(5) என்.ஜி.ரங்கா - தொழிலாளர் துறை**

**(6) எம்.வி.கிருஷ்ணாராவ் - கல்வி**

**(7) வி.சி. பழனிசாமி - மதுவிலக்கு**

**(8) டாக்டர் யூ.கிருஷ்ணாராவ் - தொழில் அமைச்சர்**

**(9) நாகண்ணா கவுடா - விவசாயம்**

**(10) சண்முக ராஜேஸ்வர சேதுபதி - பொதுப்பணித் துறை**

**(11) மாணிக்கவேல் நாயக்கர் - வருவாய்த்துறை**

**(12) கே.பி. குட்டி கிருஷ்ண நாயர் - சட்டம்**

**(13) சங்கர ரெட்டி - உள்ளாட்சித் துறை**

**(14) பட்டாபிராமராவ் - கிராம நலம்**

**(15) சஞ்சீவய்யா - கூட்டுறவு**

ஆந்திர பிரதேசம் தனி மாநிலம் ஆன பிறகு ஆந்திரத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் விலகிக் கொண்டனர். 10.03.1953 இல் எம்.பக்தவத்சலம்விவசாயம், ஜோதி வெங்கடாசலம்மதுவிலக்கு, கே.ராஜாராம் நாயுடு உள்ளாட்சித் துறை எனப் பதவி ஏற்றுக் கொண்டனர்.

இராஜாஜியின் கூட்டணி அமைச்சரவை ஒரு வழியாகப் பதவி ஏற்றுக் கொண்டது. இதுவரை நாம் எடுத்துக் கூறியவற்றிலிருந்து சாரமாக அறிந்து கொள்ளத் தக்கவைப் பற்றி கீழ்க்காணும் படி வரிசைப்படுத்தி இருக்கின்றோம்.

(1) தேர்தல் சமயத்திலும் தேர்தல் முடிவுறும் சமயத்திலும் பவநகர் ராஜா கிருஷ்ணகுமார் சிங்ஜி இருந்தார். இவரின் பதவி காலம் முடிந்த தருணம் அது. புது கவர்னர் நியமிக்கப்படவில்லை. பழைய கவர்னர் பொறுப்பில் இருக்கிறபோது வெற்றி பெற்ற கட்சிகளின் கோரிக்கையை அவர் ஏற்க அல்லது அழைக்க அனுமதிக்கப்படவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

ஸ்ரீபிரகாசா சென்னை மாநிலத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டபின் கட்சிகளின் அழைப்பு நிகழ்ச்சிகள் நடந்தன. அடுத்த புது கவர்னர் வரும் வரை பழைய கவர்னர் பதவியில் நீடிக்கலாம் எனச் சட்டம் சொல்கிறது அப்போது ஆட்சி அமைக்க கட்சிகளை அவர் அழைக்க லாம் அல்லவா? ஆனால் கவர்னர் பவநகர் ராஜா அப்படி நடந்து கொள்ள முடியவில்லை.

(2) சென்னை மாநில ஆட்சியை இத்தகைய குழப்ப நிலையில் இராஜாஜி பொறுப்பேற்கக் கூடாது என்று நேரு கருதினார். ஆனால் அதை அவர் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் அவரது ஆதரவு இராஜாஜிக்கு இருந்தது. அந்த அளவுக்கு விமர்சனமும் இராஜாஜி மீது வைக்கப்பட்டது.

மேலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த காமராசர் காங்கிரஸ் ஆட்சியை அமைக்கும் என்று தெரிவித்து இருந்தார். நேரு, காமராசர், இராஜாஜியை ஆதரிக்க வேண்டும் என்று விரும்பினார். இப்படிக் குழப்பநிலை நீடித்துக் கொண்டிருந்த நிலையில் காமராசர் நேருவைச் சந்திக்கவில்லை. ஆனாலும் தமிழ்நாடு, ஆந்திரத் தலைவர்களை காமராசரும் சஞ்சீவரெட்டியும் காங்கிரஸ் கமிட்டிகளில் இராஜாஜி முதல்வராகத்தேர்ந்தெடுக்கப்படதீர்மானம்நிறைவேற்றினர். இது ஒரு வகையில் நேருவுக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கக் கூடும்.

(3) இராஜாஜி சட்டமன்ற உறுப்பினர் இல்லை. அவர் (இடைத்)தேர்தலில் நிற்கமாட்டார். பொதுவாகவே அவர் தேர்தலில் நிற்க விரும்புவதில்லை. ஆகவே கவர்னர் அவரை மேலவைக்கு உறுப்பினராக நியமித்தார். கலை, இலக்கியம், சமூகப் பணி ஆற்றியவர்களை கவர்னர் அந்தச் சிறப்புத் தகுதி கருதி மேலவை உறுப்பினர் ஆக்கலாம். அப்படி இராஜாஜி மேலவை உறுப்பினர் ஆக்கப்பட்டார். இதனால் அவர் முதல்வரானால் தேர்தலுக்கு நிற்க வேண்டிய அவசியமில்லை என்கிற எளிதான வழியை கவர்னர் உண்டாக்கி வைத்தார். அதைச் ‘சட்டமன்றத்திற்குள் புறக்கடை வழியாக நுழைந்தவர்’ எனக் குத்தூசி குருசாமி விடுதலையில் இராஜாஜியைப் பற்றிய விமர்சனத்தை முன் வைத்தார்.

(4)தி.மு.கழக ஆதரவு பெற்ற 43 சட்டமன்ற உறுப்பினர்கள், கம்யூனி ஸ்டுகள், 43 பேர் நீங்கிய சுயேச்சைகள், சோசலிஸ்டுகள் இதர கட்சியினர் எவரும் இராஜாஜியை ஆதரிக்கவில்லை. 166 பேர் கொண்ட அய்க்கிய ஜனநாயக முன்னணியை ஸ்ரீபிரகாசா ஆட்சி அமைக்க அழைக்கவில்லை. இதற்கு மாறாக வெற்றி பெற்ற இடங்களில் அதிக இடங்களைப் பெற்ற அதாவது 152 இடங்களைப் பெற்ற சட்டமன்றத்தில் பெரிய ஒரே கட்சியாகத் திகழ்ந்த காங்கிரசை கவர்னர் அழைத்தார்.

(5) காங்கிரஸ்-152, உழைப்பாளர் கட்சி-19, என்.ஜி.ரங்கா கட்சி-15, காமன்வீல் கட்சி-6 என இக்கட்சிகளின் மொத்த இடம் 192. ஆகவே இராஜாஜி சட்டமன்றத்தில் பெரும்பான்மையைக் காட்டி ஆட்சி அமைத்தார். இதற்காக மாணிக்க வேலு நாயக்கர், இராமசாமி படையாட்சியார் ஆகியோரின் கட்சிகளான உழைப்பாளர் கட்சிக்கும், காமன்வீல் கட்சிக்கும் அமைச்சர் பதவியை வழங்கி கூட்டணி அரசில் சேர்த்துக் கொண்டார். என்.ஜி.ரங்காவும் அப்படி அமைச்சராக்கப்பட்டார். இதன் தொடர்ச்சியாக இராஜாஜி சுதந்திராக் கட்சித் தொடங்கிய போது என்.ஜி.ரங்கா கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் ஆனார். 1952 இல் இராஜாஜி பல தந்திரங்களைக் கையாண்டு முதல்வரானார். நேருவின் விருப்பத்தையும் நிறைவேற்றினார். குழப்பத்தைத் தவிர்த்தார். இராஜாஜிக்கு எதிராக மற்ற கட்சிகள் 183 இடங்களைப் பெற்றன.

இராஜாஜியின் ஆட்சியின் மீது நம்பிக்கை கோரும் தீர்மானம் 30.6.1952 ஆம் தேதி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விவாதம் 4 நாட்கள் நடைபெற்றது. தீர்மானம் ஓட்டெடுப்புக்கு வந்தபோது எதிர்க்கட்சியினர் சிலர் அவையில் ஆஜராகவில்லை. நம்பிக்கை கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக 200 உறுப்பினர்கள் வாக்களித்தனர். 151உறுப்பினர்கள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தனர். ஒரு உறுப்பினர் நடுநிலை வகித்தார். மொத்தத்தில் இராஜாஜி அமைச்சரவை வெற்றி பெற்றது.

**இராஜாஜியால் அமைக்கப்பட்ட இக் கூட்டணி அமைச்சரவை 10.04.1952 முதல் 13.04.1954 வரை இயங்கியது. அதன் பிறகு இராஜாஜி பதவி விலக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இருப்பினும் இந்த அமைச்சரவைக் கவிழாமல் தொடர்ந்தது என்பது மிக முக்கியமானது. காமராஜர் அமைச்சரவையில் எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அமைச்சரானார்.**

**இவ்வாறுதான் 1952 ஆம் ஆண்டு சென்னை மாநிலத்தில் -அப்போதைய தமிழ்நாட்டில் கூட்டணி அமைச்சரவை அமைந்தது. இப்போது அமைந்துள்ள த.வெ.க. அமைச்சரவையை 1952 கூட்டணி அமைச்சரவையோடு எந்த வகையிலும் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது இல்லை. ஆகவே 1952 ஆண்டு அமைக்கப்பட்ட கூட்டணி ஆட்சி மிகச் சிறப்புக்குரியது. அந்தக் களத்தின் ‘அரசியல் அழகே’ தனி என்று மட்டுமே நம்மால் உறுதியாகச் சொல்ல முடியும். இப்போது அமைந்துள்ள அமைச்சரவை ‘அப்ரன்டீஸ்’ அமைச்சரவை ஆகும்.** ●